உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சஞ்சிகை. ௰௩.] ௲அ௱சக ௵. ஆடி. ௧. திகதி. வியாழக்கிழமை Thursday, July 1, 1841. [No. 13.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கல்வி, சாத்திரம், பொதுவான கலை, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவைகளைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.

அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசுங் கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நாற்காய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, ௨ பென்சு அல்லது ௰௬. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சில்லிங்கு.

இதிற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்த பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மற்ற பெயருக்குச் செலவிடக்கூடிய காரியகாரருக்கு இதின விலை பத்திரம் ஒன்றுக்கு, ௧½. பென்சு அல்லது ௧. பணம். அல்லது மூன்று மாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால் விலை. ௯ பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேறக் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன விலை பத்திரம் ஒன்றுக்கு ௧. பென்சு, அல்லது ௮. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தபாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதயதாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தபாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; CHUNDICOLY—M. J. Poviribayasingem; POINT-PEDRO—A. Holmes; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq.

யாழ்ப்பாணம் —பரமானந்த காசிநாதபிள்ளை

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 112.]

இந்து தேசச் சரித்திரம்.—*Trees.*

கமுகமரம் (Areca catechu, or the po-Ka-tshitto of the Hindus) இந்து தேசமெங்கும் உண்டாக்கப்படுகின்றது. பாக்கு வெகு தேசவர்களுக்கு வியாபாரத்துக்கு அனுப்பப்படுகின்றது. இந்தினங்களில் ஒவ்வொருகிய சிறப்பான கமுகின் அடிமரம் யாதொரு கோணவிலாமல் நேரானதும (௪௰) அல்லது (௫௰) அடி உயரமுள்ளதும், சுற்றளவில் இரண்டடி பருப்பமுள்ளதுமாய் இருக்கின்றது. மரம் அழுத்தமுள்ளதும் நீட்சிக்குத்தக்க பருப்பமுள்ளதுமாய் இருக்கின்றது. இம்மரத்திலும் அதின் இலைகளிலும் விசேஷமான மெதுவுண்டு. அதே இம்மரத்தைச் சிறப்பிக்குதென, வோர்ப்பிசென்பவர் (Mr Forbes) சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்தியர் இம்மரத்தை ஒரு சவுந்தரியமுள்ள இலிங்கத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள்.

மலைப்பக்கங்களில் மிகுந்திருக்கும் மரங்களாவன, கருவாவிமரம், புன்னைமரம், அன்னாசைமரம், எல்லாவகைகளும். (Pines, Firs, Walnut, Ches-nut, Horn, Bean, Yew, Hollics, Birches, Mulberrys, Strawberry Gordonias, Michelias &c) கறுவாமரம் (Cinnamon tree) இந்த தேசத்தின் சில பகுதிகளில்மாத்திரமுண்டு. அதில் ஓரினம் (Laurus Cassia or Malabar Cinnamon) மலையாளத்தில் உண்டாகின்றது. அதின் பட்டையோ இலங்கைத்தீவின் கருவாவுக்குத் கீழ்ப்பட்டது. துன்பர்க்கென்பவர் (Professor Thunburg) இலங்கையில் பத்துவிதமான கறுவா நிற்கிறதென்றும், அவைகளில் நாலுவிதம் ஒன்றுக்கொன்று சரிவிலையாய் இருக்கிறதென்றுஞ் சொல்லியிருக்கிறார். கற்பூரக்கறுவா (The laurus Camphora, or Camphora cinnamon) இலங்கைத்தீவிலுண்டு. அதின் வேரில் இருந்து கற்பூரம் உண்டாகிறதுண்டு. இம்மரந் தேன் கறுவாவில் (The laurus cinnamonum the penni curundu or honey cinnamon) ஓரினம். இவைகள் இலங்கையில் மிகுத்திருப்பதுபோல இந்து தேசத்தில் எங்குமில்லை. நீலக்கட்டி மரம (Indigofera Indica) வங்காளமுதலிய வடபகுதிகளில் உண்டாகின்றது. அதில் இருந்து உண்டாகிற நீலத்தை (Indigo) மறுதேசங்களுக்கு வியாபாரத்துக்கு ஏற்றுவார்கள். இதில் வேறொருவிதமான மரம (Dalbergia, latifolia of the Leguminosea species) மலைகளில் உண்டாகிற மரங்கள் யாவற்றிலும் பெரிதாய இருக்கின்றது. அது தென் இந்து தேசப் பகுதிகளிலுண்டு. அதின் மரம் (Black-wood) கறுப்புள்ளதுந் தண்ணீரிற் தாழ்ந்துபோகத்தக்க கனமுள்ளதுமாய் இருக்கின்றது. றாக்ஸ்பர்க்கென்பவர் (Dr. Roxburgh) தாம் இம்மரப் பலகைகளை மலையாளத்தில் (Malabar) கண்டதாகவும், அவைகள் ஒவ்வொன்று மூன்றரையடி விசாலமுள்ளவைகளென்றும், புறப்பக்கத்தில் இருக்கும் ஒம்பது அங்குலமுள்ள சோற்றியையும்பட்டையையுந் தவிர்த்து உள்மரம (௰௫) அடி சுற்றுமிருக்கின்றதெனச் சொல்லியிருக்கிறார். இன்னும் இவைகளில ஓரினம் (Dalbergia Cissu) மிகவும் பிரயோசனமுள்ளதுங், கதியாய் வளருகிற மரங்களில் ஒன்றுமாயிருக்கின்றது. இம்மரம் முறுமுறுப்பானதும், வளையத்தக்க தன்மையுள்ளதுமாயிருப்பதினால மற்றெந்த மரங்களும் இதற்கொப்பிலையென டாக்குத்தர் வாலிச்சென்பவர் (Dr. Walilch) எழுதியிருக்கிறார். பலாசமரம (Butea Frondosa, or the palasa of the Hindus) பெரிதும் அதில அடிமரம் வளைந்ததுமாய் இருக்கின்றது. இம்மரத்தை இந்தியர் பரிசுத்தமுள்ளதென்று எண்ணிவருகிறார்கள். அதின் இலைகள் (௰௨) அல்லது (௰௬) அங்குல நீட்பமுள்ளவைகள். பலாசமரம் இந்தியருடைய வேதங்களிலும், மனுநீதிசாஸ்திரத்திலுஞ், சங்கிருத நூல்களிலும் பரிசுத்தமுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

முற்காலத்தில் கிஷ்ட்டண நகரத்தில் (Christna nagar) பலாசவிருக்கங்களுள்ள ஓர் சோலை அப்பட்டணத்திற்கு ஆபரணமாய் இருந்தது. கோடைகாலத்திற் பலாசமரத்தின் பட்டையில் வெட்ட, அதில் இருந்து உண்டாகிற சிவந்த சாறு சுறுக்கிலே தடித்து மரகதத்தைப் போற் பிரகாசமுள்ள சிறப்பான பிசினாகும். அது பலகாரியத்துக்குங் கூடும். (See Roxburgh's Plant of Coromandel) அதின் பூக்களில இருந்து சிறப்பான மஞ்சள்நிறச் சாயமுண்டாகின்றது. இதிலும் வேறொரு இனமுண்டு. (Butea Superba) அதுவும் பெரிய மரமாகின்றது. அதில அதிக புட்பங்கள் சொரிந்திருக்கும், முந்தின மரத்திலுண்டான சாயத்தைப்போலொத்த சாயம இம்மரத்திலுமுண்டு. வடகனடத்திற் புன்னைமரம் மிகுதி. (Laureltree or the Calophyllum innophyllum) அதின் சிறப்பான பூக்களும் நிழலும்மிகவுஞ் சிறப்பான காட்சியைக்கொள்ளுகின்றன. புன்னைக்கொட்டைகளில் இருந்து எண்ணெய் வடித்து அவ்வூர்ச் சனங்கள் விளக்கெரிப்பார்கள். இம்மரம (௬௰) அடி உயரமும் (௰௨) அடி சுற்றுள்ளதுமாய் இருக்கின்றது. சிற்றாமணக்கமரம (Ricinnus Communis or the Palma Christa) மைசூர் இராச்சியத்திலும இந்து தேசத்தின் மறுபகுதிகளிலுமுண்டு. அதிலிருந்துண்டாகிற எண்ணெய் (Castor oil) விளக்கெரிப்பதற்கு ஏற்றதுமல்லாமல் மருந்தினுடைமையாயும் இருக்கின்றது. பா

Digitized by Google

ஒருமைக்கட்டான் கற்றகல்வி ஒருவற்-கெழுமையுமேமாப்புடைத்து.
கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு மாடல்லமற்றையவை.

நாலடி நானூறு. சமயம். அதிகாரத்திற் சிலசெய்யுட்கள்.

குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகு-மஞ்சளழகு மழகல்ல-நெஞ்சத்து நல்லம்யாமென்னு நடுவுநிலைமையாற்-கல்வியழகேயழகு.

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றாற்-றம்மைவிளக்குமாற்றூமுளராற் கேடின்றா-லெம்மையுலகத்தும் யாங்காணேங்கல்விபோல்-மம்மரறுக்கு மருந்து.

வைப்புழிக்கோட்படாவாய்த்தீயிற் கேடில்லை-மிக்கசிறப்பினரசர் செறினவ்வார்லெச்சமெனவொருவன் மக்கட்குச்செய்வன-விச்சை மற்றல்ல பிற.

கல்வியினது மேன்மை இத்தன்மையயாய் இருக்கிறபடியால் செல்வமுஞ், சர்க்கை முதலியவைகளைப் பார்க்கக் கல்வியைச் சகலரும் மேலானதென்றெண்ணி அதனைத் தேட முயற்சிபண்ணவேண்டும். ஆனாலும் இத்தேசத்தவர்களில் அநேகர் சகவதியுறைகிறக்குமிடத்தில இலக்குமி வாரான். ஆகையாற் கல்வி மிகுதியாகக் கற்றாற் செல்வமுண்டாகாது என்றுபேசித் தங்கள் பிள்ளைகளைத் தம் பெயரெழுத வாசிக்கப்பழக்கிக் கொண்டு விட்டுவிட்டதை நான் கண்ணாரக்கண்டிருந்ததுமன்றிப், பூர்வீகத்திலே இப்படிப்பட்ட வீணெண்ணம் மிகவும்பெலன்கொண்டிருந்ததென்றும் மறுபேரால் உறுதியாசக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் இக்காலத்தில் அநேகர் தங்கண் முன்னோருடைய பழையவொழுக்குகளையும் எண்ணங்களையும் விடப்படாதென்று இருக்கிறார்கள். ஆகில நன்னூலிலே கடைசியான சூத்திரத்தில் பழையனகழிதலும புதியனபுகுதலும் வழுவலகாலவகையினானே- எனவும். சிவப்பிரகாசத்திற் பன்னிரண்டாஞ் செய்யுளில்- தொன்மையவாமெனுமெவையு நன்றாகாவின்று தோன்றிய நூலெனுமெவையுந்தீதாகா துணிந்த- நன்மையினார்நலங்கொண் மணிபொதியுமதன் களங்க நவையாதென வுள்ளமை மயக்கிடுவர் நடுவாந்-தன்மையினார் பழமையழகாராய்ந்து தரிப்பர் தவறு நலம்பொருளின் கட்சார்வாராய்ந்தறிதலின்மையினார் பரா புகழிலேத்துவர்பிறிலருற்றிகழ்ந்தனரேவிசழுந்திடுவர் தமக்கெனவொருமதிலர் எனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே கற்றறிந்த மேலோர் நூல்களிலே தானும் பழயகாரியங்களிற் சிலவற்றைத் தள்ளிப் புதியவைகளிற் சிலவற்றை ஏர்த்துக்கொள்ளவேண்டிய காரணங்கள் உண்டென்று சொலவி இருக்க நாங்கள் எங்கள் நடக்கைகளிலும் எண்ணங்களிலுஞ் சிலவற்றைத் தள்ளிப்போடப்படாதா? வடதேசத்திற் படித்தவர்களென்று பெயர்பெற்றவர்கள் பெரும்பாலும பாக்கியவான்களென்று கேள்விப்படுகிறோம். இத்தேசத்திலுந் தங்கள் மட்டுக்குப் படித்திருக்கிறவர்கள் அவர்கள் மூடராயிருந்தால் என்ன நிலபரத்தில இருப்பார்களோ அந்த நிலபரத்துக்கும்மேற்பட்ட செல்வமுடையவர்களாயிருக்கிறதேயன்றி அதிக கேடான நிலபரத்திற் போய்விட்டவர்களை நாங்கள் காணவில்லை. கல்வியானது வறியவன் செல்வனாகிறதற்குஞ்செல்வன் தன் பாக்கியஞ் சிதைந்துபோகாமல் வருத்தக்கபண்ணுகிறதற்குங் காரணமாயிருக்கிறது. இவ்விதமாகவே கல்வியுஞ் செல்வமும ஒன்றுக்கொன்று துணையாயிருக்கிறதன்றி விரோதமாயிருக்கவில்லை. ஆனதினாற் சகவதி உலறந்திருக்கிற இடத்தில இலக்குமி வாரான் என்று எங்கண்முன்னோர்கொண்டிருந்த பழைய எண்ணங்களை அங்கிகரியாமல அதை முற்றுகத் தள்ளிவிட்டு இத்தேசத்தில் இயல்புள்ளவர்களுந் தருமசிந்தையுள்ளவர்களுமாயிருக்கற சகலருமொருமித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொன்று அல்லது அதிகமான தருமப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துப் பிள்ளைகளைச் சேர்த்து அதற்கடுத்த உவாத்திகளையும் நியமித்து வரிசைப்படுத்துகிறதற்கு எத்தனம்பண்ணும்படி கேட்கிறதேயன்றி இப்படிப்பட்ட சற்கருமத்தை முயற்சிபண்ணிச்செய்கிறதற்கு விருப்பமுள்ளவர்கள் அதை எப்படி நடப்பித்தால நல்லது என்பதையும் உதயதாரகைப்பத்திரிகையின் வழியாய் அறிவிக்கக்கேட்கிறேன்.

உடுப்பிட்டி. ருஅாசக. ஆ௲ ஆனி மீ௨ சங். திகதி.

இப்படிக்குக் கல்விப்பிரியன்.

[A Question on Tamil Grammar.]

உதயதாரகைப்பத்திரத்தின், முகாமைக்காரரே,

உங்கள் உதயதாரகைப் பத்திரத்திற் கற்கை, சாத்திரம் முதலியவற்றைப்பற்றி அச்சடிக்கப்படுமென்று நீங்கள் இதற்குமுன் பிரசித்தப்படுத்தின பத்திரங்களில் வாசித்து அறிந்தபடியால் இப்போது தமிழ் இலக்கணத்தில ஒருகாரியத்தை உங்களுக்கு எழுதுகிறேன். அதாவதெனில்,

நன்னூல் எழுத்தியல் ௪௨. சூத்திரம். ஐஔ இஉச்செறிய முதலெழுத் திவவிரண்டோரினமாய்வ ன்மறையே.

இச்சூத்திரத்தால முதலெழுத்துக்களனைவை இரண்டிரண்டினமாய் வரும். எப்படியென்றால், அஆ-இஈ-உஊ-எஏ-ஐஇ-ஒஓ-உஔ-என உயிரெழுத்துக்களில நெட்டெழுத்துக்கள் குற்றெழுத்தை இனமாகக்கொண்டன. கங-சஞ-டண-தந-பம-றன என வலலெழுத்துக்களானவை தத்தமக்கடுத்த மெல்லெழுத்தை இனமாகக்கொண்டன இதற்குத் திருட்டாந்தமாக இசைகெடின் மொழிமுதலிடை சலை நிலைநெடி— லளபெழுமவற்றவற்றின் குறிலிணையளபும்— நரப்பெயர் முன்னினமெல்லெழுத்து- வரப்பெறுவுமுனவேற்றுமைவழியே — சுவைப்புளி முன்னினமெல்லையுந்தோன்றும்— மெல்லொற்றுடர்மொழியுட்சிலவேற்றுமையிற்- றம்மினவன்றொடராகாமன்னே — ஐந்தனொற்றடைவதுமினமுங்கேடும்-பூப்பெயர்முன்னினமென்மையுந்தோன்றும்— பரரூமுன்னர்க்கசதபவலவழி- இடைபுகமிகலுமாகுமவேற்றுமை-மிகலுமினத்தொடுறழ்தலும்விதிமேல்— என்றும, நன்னூலில அநேக சூத்திரங்களில் உயிரெழுத்துக்களொன்றற்கொன்றினமும் வலலெழுத்துக்களுக்கு மெல்லெழுத்துக்களினமுமாமென்ற கருத்துண்டாகச் சொலலப்பட்டிருக்கிறது மன்றி, இடையினந் தங்களுக்குளொன்றற் கொன்று இனமென்றாவது அவைகள் வேறியாதோரெழுத்துக்களுடன் இனமாயிருக்கின்றனவென்று நன்னூலில என்குதல் அலலது நானறிந்த வேறியாதொரு இலக்கணநூலிலெங்குதல் சொலலியிருக்கிறதாகக் காணவில்லை.

ஆகையால் இடையினமெல்லாப்படும். ய-ர-ல-வ-ழ-ள- என்றவ்வெழுத்துக்கள் தமக்குட்டாமே ஒன்றற்கொன்று இனமாயிருக்கின்றனவோ அலலது வேறெழுத்துகளுக்கு இனமாயிருக்கின்றனவோ என்பது என் சிற்றறிவுக்குத் தோன்றுமையால், இலக்கணத்தில்வல்ல பெரியோர் வழியாக இதைப்பற்றி ஒருகருத்தை அறிந்துகொள்ள ஆசையுள்ளவனாயிருக்கிறேன்.

உடுப்பிட்டி. ருஅாசகம். ஆ௲ வைகாசி மீ௨ ௨௨. திக.

இலக்கண நட்பன் சபைக்காரன்.

வைத்தியம்.

[Answer to a Question on "Pulsation."]

உதயதாரகைப்பத்திரிகையின் முகாமைக்காரருக்கு.

துரைகளே,

உங்கள் உதயதாரகைப்பத்திரிகையில், கஞ. சஞ்சிகை ௫ம்.பக்கத்தில் "வைத்தியப்பிரியன்" கேட்டகேள்விக்கு விடை. அவ்வைத்தியப்பிரியன் கேட்டுக்கொண்ட வினா மிக நுட்பமாயிருந்தாலுங் கைத்தாதுபார்த்து வாதபித்தசிலேஷ்மங்களை அறியும்படி என் சிற்றறிவிற்றோன்றியமட்டுக்கு வைத்திய சாத்திரங்களிற் சிலவாக்கியங்களைக்கொண்டு சுருக்கமாக விபரிக்கிறேன். வைத்திய சாஸ்திரத்திற் சொல்லியிருக்குந் துணைக்காரணங்களாகிய பல செய்யுட்களைக்கொண்டு அவ்வாதபித்த சிலேஷ்மங்களை விருத்தியாய் அறிவதன்றி வைத்தியப்பிரியன் தனது வினாவிலே காட்டிய, ஆடப்பா வாதந்தானுமயிலடைகோழியாமை, என்னுஞ் செய்யுளானும், பெருவிரலங்குலத்திற்பிடித்துடனடுவேதொட்டால், என்னுஞ் செய்யுளானும் மாத்திரம் அறிய அரிதென்பதற்கு உதாரணம். அகத்தியமாமுனிவர் அருளிச்செய்த வைத்தியசூத்திரம், ௬௱. தேடியேடலநாலுமறிந்துசெண்டுசெத்திலேவைத்தியனென்றுசெப்பவேணும் என்பதனாலறிக. வாதபித்த சிலேஷ்மங்களைக் கைத்தாதினான் மாத்திரம் அறியக்கூடாதென்பதற்கு உதாரணம். தனவந்திரியாரருளிச்செய்த உக்கிரகாண்டம். நாடிகைம்மணிபேந்தரம்பிணிவோடுங்காலகைகபோலத்திலூர்றுநின்றுநோனுமனும்போகத்தாலறி, கேடின் மற்றதெலாஞ் சொலலக்கேட்டறி என்பதனாலறிக. வாதபித்த கபமறிவதற்குவிதி அகத்தியர் சூடு. அறிவதுவாதந்தானுமாத்திரையரைதானோடிற், செறிவதுபித்தப்பாற்சேர்சயனென்றும் பின்னும், பிறிவதுவையந்தானும்பிறவாதகாருமோடின், மறிவதுசமமதாகும்மயக்குமில்லைக்காணே. இதைச்சுபகதியென்றும் இதிற்கூடிக்குறைந்தகதியை அசுபகதியென்றுஞ் சொல்லியிருக்கின்றது. அதை இரசிதபூரித கும்பிதமுறையாலறியவேண்டியது. இரத்தச்சுருக்கம். சேத்துமமெழுந்திருக்கிற்றித்திப்புநாவிலேயு, மேத்தியகசப்புமீறிலெழும்பிடும்பித்தமாகும், வாக்கிய புளிப்புமீறில் வளர்ந்திடும்வாதமாகுஞ், சேத்துமந்தண்ணீர்பித்தந்தீயதுகாற்றுவாதம். அகத்தியர் சூடு. சாணப்பாவாதமீறிற்கால்

th,

Digitized by Google



கைகள்பொருந்துநோகும், பூணப்பாகுடல்பிரட்டுமலசலம்பொருமிகட்டு, மூணப்பாகுளிருங்காய்ச்சலுடம்பெலாங்குத்தல் வாயு வீஙப்பாகுணமிநச்சுபவேர்வையமவேர்க்குந்தானே. நானென்றபித்தநிற்சடமெலாங்காந்தமிறு, மூனென்றவாந்திவாயுநீருதியேபொழஞ்சால, வானென்றமனமுமவெதுமண்டையிற்குத்துண்டாகுந்தேனலறவித்தமூர்ச்சை செவியடைப்புண்டாமபாரே. பாரப்பாவயமிறிற்பரிவுறபவேர்வைமீறு, நோப்பாவிழைக்குஞ்சோம்பிநெஞ்சடைவிலாவுநோகுந், தாப்பாசுரமுங்காயுஞ்சாதமும்வெறுக்குஙளிர், பேயப்பாலுபரத்தங்கக்குமுடலவற்றும்பேதமமே. வைத்திருத்திமசுரா. ஆமப்பா வாதமதுவக்கிரகதியாங்கடன்னமோடுமயிலாணுலகோழிபோல, வேமப்பா திருகலாயப்பித்தந்காக்கை பூன்நடைபேணேனூகுமூமாறிப்பாரு, நாமப்பாபித்தநடை புறவைப்பாலுஞ்சவலுடைபோரபோலுமமைபோலு, நாமப்பாவட்டைபானைரபூக்குநடக்குமடாபித்தமதுநாடிப்பாரே. நாடியாறுஞ்சிலேஷமந்தேனைவெழுந்துநலதாமினமானயண்டூகம்போலச், சூடியதற்திபதுநாகமபோலுஞ்சுறுக்காகநடக்கிறதுவயாக்துபாயு, மாடீமூன்றுவிரல்காலலரையொன்றுகிலசடிலலேச் சமனகவோடிற்றுஞ்ச், மறதியவாதமேசன்னிவாதஞ்செப்பிடாய்நன்றாகத் தெளிந்தானே. தானென்றவாதமதிரட்டித்தோடிற்றப்பாது பித்தமதிற்றேறி, லேனென்றவாதபித்தந்தொந்திப்பேயாகுமிதுவாதமிரட்டித்துச்சிலேஷமமொன்றாகி, ஆனென்றவாதமையதொந்திப்பேகுமுற்றபித்தமிரட்டித்துவாதமொன்றேறிற், கோனென்றபித்தமுடலவாதஞ்சேர்ந்துகொண்டதிந்தரோகமெனக்கூறவாயே. கூறுறன்பித்தமதிரண்டதாகிற்குணமில்லாச்சிலேஷமமொன்றேயாகி, சொருவேன்பித்தசிலேஷமந்தானென்றுதுலங்குசிலேஷமமிரட்டிதமொன்று. தேறுவேனசிலேஷமவாதந்தானென்றுசிலேஷமமேரட்டிபித்தமொன்றுசேரின், வெறுநீநினையாதேசிலேஷமபித்தமிந்தபலமதசாரமிருதிதானே. மிருதியென்றவாதமுடனையஞ்சேரிமென்றுகட்பிணைபலைப்போல்விளங்குமபாரு, தருதியென்றவாதமுடனையஞ்சேரிற்றுனமயிலரபபோலேயோடுக், துருதியென்றபித்தமொடு சிலேஷமமாகிற் சேற்றிலுறையட்டையைப்பார்றவனேபோல. நிருதியென்றவாதமதுதனித்தப்பாதுநீமயிற்சாயலெனநிற்கும்பாரே. நிற்குமேபித்தநடைபெருகவொடுநேரானவையமதுவக்துநீறு, மொகுமேழுவரனுமவந்தமிச்சமுண்மையாய் மனதிலவைத்துத்துபார்த்துச், சிக்குமலசலங்களுக்குவாதமிச்சந்தேகத்திற்குடைழம்பிற்பித்தமிச்ச, மொக்கவேமேனியதிற்குளிர்ச்சிகண்டாலமுடிவானவையமதுமூனங்கும்வரே. இபத்தச்சுருக்கம. நாடியான்முன்னேசொன்னதற்குறிகுணங்களாலு, நீடியவழியினாலு மின்றநாக்குறிப்பினாலும், வாடியமயனியாலுமலமெடுநீரினாலுஞ், சூடியவியாதிதனைச்சுகமபடவறிந்துசொல்லே. சுகம்படயங்கமேலலாஞ் சுருத்திகுணங்களாய்ந்து, மூக்குருநாடிமூக்குச்செவிதுதனையநாடி, மதவடங்கநடியதிதெசவாயுநாடி, மகந்தடியுந்துநாடியாணமையாய்நடைகள்பாரே.

கிரியுபார்க்கற் கடலபோல் விரிந்திடுந் தெரிகிவிந்திரல்சேடனுக்கேர்கலா என வயித்தயசாத்திரத்திற் சொலவியிருக்கின்றமையால வாசிபித்த சிலெட்டுமங்களையறிகிறதற்குண்டான விதிகளெல்லாவற்றையுமெடுத்துக்காட்டுகில மிகவிரியும ஆதலாலீண்டுக் கூறிலம்.

௲அ௱சசைம ஆ ஆனி௴ சநது.

உடுப்பிட்டியாற் பள்ளிக்கூடத்திலார் மாணாக்கள்.

கந்தர் கணபதிப்பிள்ளை.

சகத்து நிண்ணயச் சமாசவுரை.

முகாமைக்காரரே,

உதயதாரகையிற் கண்ட சகத்து நிண்ணயமும், அதற்குத் துணையான ஒத்துரை, சார்புரை, தணிபுரைகளெல்லாம் என் சிற்றறிவுக்குத் தோன்றிய மட்டும் ஒரு தலை வழக்காய்க் காணப்படுகின்றன. ஏனெனில், சகத்துள்ளதெனில், தோற்ற வேண்டியதில்லை இல்லதெனில், தோற்ற மாட்டாது. இவ்விரு வழியினுஞ் சகத்திற்குத் தோற்றமில்லை தோற்றமில்லதே அநாதியாம். உதாரணம் சிவஞானசித்தியார், உள்ளதுமிலதுமின்றி நின்றதொன்றிலதே துண்டாம். இல்லதேவில்லதாகுந் தோற்றமுமிசையாதாகும். இது சமட்டி யிலக்கணம்.

தணிபுரையிற் கண்டபடி, சகத்து, ஆதியநித்தியமாகவேயிருந்தாற் பின்பு தோன்றுதற்கேதுவில்லை. அது சமட்டி வியட்டியான காரணகாரிய ரூபவிகற்பங்களினாலே, அநாதி நித்தியமென்றும், ஆதியநித்தியமென்றுஞ் சொல்லப்படும். சமட்டியாவது, வித்தின் மரமொடுக்கமாம் வியட்டியாவது, வித்தின் சாரமே மரமாதலாம் இப்படியிருப்பதினாற் சகத்தின காரண ரூபமான சமட்டியை அநாதிநித்தியமென்றுங் காரிய ரூபமான வியட்டியை ஆதியநித்தியமென்றுஞ் சாத்திரங்களிற் காணலாம். உ. சிவஞானபோதம். ஒலைபித்த தன்னிலையித்ததாமலத்தாவிலையித்த வாறுளதா லேவன்றிலையித்த தந்திறிபிலெனிலா யாதவையழிவ தத்தியுமாகியுமமாம். ஆகையால, சகத்து அநாதி நித்தியமும, ஆதியநித்தியமுமாம். உம். சிவஞான சித்தியார். கருது காரணமு முண்டாய்க் காரிய முள்ளதாகி, வருதலாலநாதிவையம்மற்றொரு கடவுளித்தைத், தருதலாலாதியாகச் சாற்றலுமாகும். என வருவனவற்றாற் காண்க.

இப்படிக்கு. கதிர்காமர். ஏகாம்பரம்.

ஆனி௴. ௰௫ தி.

முகாமைக்காரர் வசனம்.

சகத்து நிண்ணயத்திலும எங்களுடைய ஒத்துரையிலும் மாயை அல்லது பாசம் அநாதியென்று தெளிவாய்க் காட்டித் தோற்றமான சகத்தேயாதியென்று எடுத்துப்பேசப்பட்டது. அதாவது, சமட்டிரூபமாகிய மாயை அநாதி, வியட்டிரூபமாகிய சகத்து ஆதி. இதுவே இந்தச்சமாசவுரையிலுங் காணப்படுகின்றது. இதுவன்றி யாதொரு சாதனத்தைக்காணவிலலை. ஏனெனில் ஆதியென வெடுத்துப்பேசப்பட்டது வியட்டிரூபமாயுள்ள சகத்தையன்றிச் சமட்டிரூபமாயுள்ள மாயையையன்று, ஆகையால் ஏகாம்பரம் முன்போனவையை ஒரு தலைவழக்கென்றது செல்லாது.

[Brief descriptions of the most remarkable animals that inhabit the earth, illustrated by cuts on a comparative scale.]

யானையைப்பற்றியது.—THE ELEPHANT.

[Continued from page 118.]

அதற்கொரு திட்டாந்தம்,

இந்தத்தேசத்தில் வைக்கமென்றொரு ஊரில் விருபாட்சனென்ற ஒரு யானை இருந்தது. அதின் பாகனுக்குக் கண்ணல்கோரனென்று பெயர். அவன் மிகவுஞ் சாராயங் குடிக்கிறவனானதால் ஒருநாள் அதிகமாய்க் குடித்துக்கொண்டு யானைக்குத் தண்ணீர் காட்டப்புறப்பட்டான். அப்பொழுது வெறிமேலிட்டதினாலே பேயாடுகிறவனைப்போலத் தலைசுழற்றிக் கொண்டு யானையிலிருந்து தான் பிடித்திருந்த அங்குசத்தை நெகிழவிட்டுவிட்டான். அது பூமியிற் கலீரென்று விழுந்தது. அதை அந்தயானை எடுத்து வழக்கத்தின்படி அவன் கையிற் கொடுத்தது, அவன் அதை வாங்காததினாலே அவன் குறிப்பறிந்து அது தானே வைத்துக்கொண்டுபோயிற்று. அப்படியிருக்கையில அவனுஞ் சோர்ந்து தலைகீழாய்விழுந்தான். அந்தயானை அவன் மயங்கிவிழுகிறவேளையிலும் விழுமுன்னே ஒரு காலைக்கொண்டு தாங்கிச், கையில தழுவிச் சாவதானமாய் அணைத்துக்கொண்டு, திரும்பி அவன் வீட்டுக்குப்போய்த் தான் வெளியிலே நின்றுகொண்டு தன்கையை நீட்டி அவனை வீட்டினுள்ளே ஒரு சுவரிற் சார்த்திவைத்துப பையப உடம்பெல்லாந் தடவிக்கையைவெளியிலே வாங்கிக்கொண்டு, மனஸ்தாபத்தோடே செவி. வால், துதிக்கை முதலானவைகளும் அசைவற்ற மரம்போல நின்றது. உடனே அவன்மனைவியும் வந்து அவனுக்குச் சுக்கு வெந்நீர் முதலானவைகள் கொடுத்து உறங்கப்பண்ணினாள். அவனுஞ் சிறிது பொழுது உறங்கி வெறிதீர்ந்து தெளிவுவந்து எழுந்திருந்தான். அப்பொழுது யானைசெய்தவைகளை எல்லாம் அவனிடத்திற் சொன்னாள். உடனே அவன் அந்த யானையைப் பட்சமாய்ப் பார்த்து, விருபாட்சா! நான் அவசமுற்றகாலத்திலே என்னை எடுத்து இவ்விடத்தற்கொண்டுவந்து சேர்த்தாயே. உன்னைப்போல எனக்கு ஆர் உபகாரஞ்செய்வார்களென்று வெளியே வந்து அதின் கையைத் தழுவி அழைத்துக்கொண்டுபோனான்.

அன்றியுஞ் சிரங்கப்பட்டினம்பிடிக்கிற காலத்தில் ஆற்றுவழியாய்ச் சில யானைகள் பீரங்கிகளை இழுத்துக்கொண்டு போயின. அப்பொழுது ஒரு இறக்கத்தில இறங்குகையில் ஒரு யானை மாவுத்தன் அந்த வண்டிக்கு முன்பாகக் குப்புறவிழுந்தான். இறக்கத்தில இருந்து வண்டி மிகவுஞ் சடுதியாய்ப் பாயுமென்று யானை அறிந்து, வண்டில் உருண்டு அவன் நெஞ்சிற் பாயாமல் நிறுத்தி, முகப்பைத் தூக்கி மேட்டில் ஏற்றிக்கொண்டு நின்றது. அதினாலே அவன் இறந்துபோகாமல் வெளியேறிப் பிழைத்தான். அதைக் கண்டவர்கள் யானையினுடைய விவேகத்தையும் அது செய்த உபகாரத்தையும் அறிந்து ஆச்சரியப்பட்டார்கள்.

Digitized by Google

யானைகள் இப்படிப்பாகனிடத்தில் அன்புள்ளவைகளாய் இருக்கிறதினாலே பாகனில்லாத வேளையில் அவன் மனைவி யாதாகிலும் ஒரு காரியத்துக்குப் போகவேண்டியிருக்கையில் யானை காத்துக்கொள்ளுமட்டுக்குத் தன் பிள்ளையை அதற்கு முன்னே வைத்துவிட்டுப்போவாள். அதுவும் அந்தப் பிள்ளைக்குச் சேதம் வாராமல் வளர்க்கிற ஆயாளைப்போலக் காத்துக்கொள்ளும். அது ஊர்ந்துபோகையில் தனக்கிரையாக இட்டிருக்கிற மடல், குழை, கொப்பு, கோரை, கொடி செடி கிடந்தாலும் அதைக் கையினாலே ஒதுக்கிக்கொள்ளும். அவைகள் ஒருவேளையில் அந்தப்பிள்ளையின் கால்களிற் சுற்றிக்கொண்டாலும் அதை மெல்ல நெகிழ்த்து எடுத்துவிடும். தன் காற்சங்கிலி விட்டுக் கட்டியிருக்கிற தூரத்தினின்றுந் தன் கை நீளுந் தூரத்தினின்றுங் கடந்து அந்தப் பிள்ளை அப்புறம் போகிறதாய் இருந்தால், அங்கே போகவொட்டாமலும் உடனே தன் கையை நீட்டி எடுத்துக் கிட்டவைத்துக்கொள்ளும். இவ்விதமாய்த் தாய்வரும் வரையுங் காத்துக்கொண்டிருக்கும்.

சில யானைகள் பாகனிடத்திற் பட்சமாயிருந்தாலும் அவைகளுக்கு மதம்வந்தகாலத்திற் பாகனையுங் கொல்லும். காண்பூரிலிருந்த பட்டாளத்திற் சில யானைகள் இருந்தன. அவைகளில் ஒன்று மதங்கொண்டு, ஒருநாள் இராத்திரி சங்கிலியும் அறுத்துக்கொண்டு பட்டாளத்துக்குட் பிரவேசித்துக் கூடாரங்களையுந் தள்ளிக், குதிரைகளும், ஒட்டகங்களும், மாடுகளும், மனிதர்களும் பயந்தோடும்படியாகத் துரத்திற்று. சிலர் ஆயுதங்களையும், இட்டிகளையும், எடுத்துக்கொண்டு சமீபித்து நிறுத்தவேண்டுமென்று அடுக்கையிலும் அடங்காமல் அநேகரையும் உபத்திரவப்படுத்திற்று. யானைக்காரன் அடுத்துப் பிடிக்கப்போனபொழுதும் அவனைக் கையினாலே அறைந்துகொண்டு தள்ளிவிட்டு நின்றது. அவன் எழுந்திராததினாலே அவனைப் புரட்டிப் பார்த்துச் செத்துப்போனானென்று அறிந்து, துக்கப்பட்டுத் தான்கொண்ட மதவெறியெல்லாம் அடங்கிச், சற்றுநேரம் நின்று பார்த்துவிட்டு ஒரு கன்றுக்குட்டியைப்போலப் போய்க் கட்டுத்துறையில் நின்றது. அவ்விடத்தில் ஒரு குடில்கட்டி அந்த யானைக்காரன் படுத்திருப்பான். அதில் இரண்டுவயதுள்ள அவன் குழந்தை கிடந்தது. அதை எடுத்துக் கையில் அணைத்துக்கொண்டு அதின் தகப்பனைக்கொன்றதற்காக இரங்கித் தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டழுது அந்தப்பிள்ளையை நிறுத்தித் தடவிக் குலைந்த வஸ்திரங்களை உடுத்துப்போகவிட்டது. அந்தப் பிள்ளையை அது பிடிக்கையிலும் எடுக்கையிலும் வைக்கையிலுந் தடவுகையிலுங் கண்டவர்கள் யானைக்காரனைக் கொலைசெய்தது போல அவன் பிள்ளையையுங் கொலைசெய்யப்பார்க்கிறதோவென்று பரிதபித்தார்கள். பின்பு அதுசெய்த இரக்கத்தை அறிந்து ஆச்சரியப்பட்டார்கள். அந்த யானை அந்தப்பாகனுடைய பிள்ளையைக் காணும்பொழுதெல்லாந் துக்கத்தை அடையும். அப்படித் துக்கமுள்ளதாய்க் கவளமுங்கொள்ளாமற் சரீரமும்மெலிந்து சிலநாள் நின்று செத்துப்போயிற்று.

யானைகள் பாரமான பதார்த்தங்கள் சுமக்கிறதற்காகவும் வண்டில் இழுக்கிறதற்காகவும் வளர்க்கப்படுகின்றன. அவைகள் மாடுகள் ஏறக்கூடாத உச்சமான ஏற்றங்களிலுமேறிச் செய்யவேண்டியவைகளைச் செய்யும். தாங்கள் செய்கிறவைகளில் மனிதர்கள் பிரியமாய் இருக்கிறதைக் கண்டாற் பின்னும் அவர்களுக்குப் பிரியம் உண்டாகும்படி சாக்கிரதையாய்ச் செய்யும். இப்படி எந்த வேளையில் எது செய்யவேண்டுமோ அதை மிகுந்த புத்தியோடே செய்யும்.

ஒருவன் யானை ஏறிக்கொண்டுபோகையில் யானைக்கெட்டாத கொப்புகளிற் பழுத்திருக்கிற பழத்தைப் பறிக்கவேண்டுமென்று யானையை நிறுத்திக்கொண்டு அதின் மேல் நின்று பறிப்பான். அப்பொழுது அந்த காரணத்துக்காகத் தன்னை நிறுத்தினானென்றறிந்துகொண்டு, ஒரு பொற்றையைப் போல அசையாமல் நிற்கும். பாகனுக்குப் பழங்கள் வேண்டியிருக்குமானால், மிகவும் பக்குவமாய் நெருங்கிப் பழுத்துக் கொத்துக்கொத்தாய்த் தூங்குகிற பெரிய கொப்புகளை முறித்துக் கொடுக்கும். அதிற் சில பழத்தை அதற்குக் கொடுத்தால் அதை வாங்கி விழுங்கிக்கொண்டு சந்தோஷமாய் முழங்கும். வழிகளிற் பாகனுக்குத் தட்டுகிறதாகச் சில கொப்புகள் இருந்தாலும் அவைகளைப் படலைபடலையாய் முறித்துத் தள்ளிவிடும். இவ்விதமாய் மனிதர்களுக்கு உபகாரமாய் இருக்கிற யானைகள் இறந்துபோன பின்பும் அவற்றின கொம்புகள் மிகவும் உபகாரமாய் இருக்கின்றன.

இப்படிப்பட்ட பலத்த மிருகத்தையுங் கீழ்ப்படுத்திக்கொள்ளும்படிக்கு மனிதர்களுக்குப் புத்தியுந் திராணியுங் கொடுத்த தேவனைத் தோத்திரம்பண்ணவேண்டும்.

பஞ்ச தந்திரக் கதை.

மித்திரபேத தந்திரம். ஏழாம் பக்கத்தினின்று.

எப்போதவன் காதுகளை நெறித்துக்கொண்டு வாலைத்தூக்குகிறானோ அப்போது கொல்ல நினைத்தானென்றறியவேண்டும். அக்காலத்தில் அப்படியே நீயும் அவனுக்கு முன்னே இருக்கவேண்டும். தவிரவுங்கூட உனக்குத் தெரியாததில்லை எல்லாந் தெரிந்தவர்கட்குச் சொல்வானேனென்று சொல்லிவிட்டுத் தமனகன் மறுபடி கரடகன் இடத்திற்குப் போயிற்று. அப்போது கரடகன், என்னமாச்சுது சொல்லென்ன தமனகன் காரியம் முடிந்தது, இருவருடைய சினேகத்தில் மண்விழுந்தது. இப்போது நான் சிங்கத்தின் கோபக்குறி இப்படியிருக்குமென்று சஞ்சீவகனுக்குச் சொன்னபடியே செய்விக்கிறேனென்று பிங்கலனிடத்திற்குப் போய் அப்படியே அதைச்செய்வித்தது.

பிறகு சஞ்சீவகன் சிங்கம் இருக்கும் இடத்துக்கு வந்து பார்க்கும்போது முன் தனக்குத் தமனகன் சொன்னபடியே இருக்கக் கண்டு மிகவும் விசனமடைந்து பராக்கிரமத்தினாலேயே பிராணனை விட்டிடவேண்டுமென்று நிச்சயித்து யுத்தத்துக்காரம்பிக்கவே இரண்டுக்கும் பெரிய சண்டை விளைந்தது. கரடகன் அதைப் பார்த்து, தமனகா துஷ்டா, உன் சேர்க்கையால் இராசாவுக்குஞ் சினேகனுக்குஞ் சண்டையுண்டாயிற்று. இராச நீதியில் சாம, பேத, தான, தண்டமென்னு நாலு உபாயங்கள் இருக்கின்றன. அவைகளிற் சாமமென்னும் உபாயம் முக்கியமானது ஏனென்றால் அதனாற் காரியசித்திபுண்டாகிறதுபோல மற்றவைகளாலுண்டாகாது. பகையிருந்தாலுஞ் சாம உபாயத்தினாலே போம். இப்படியிருக்கையில், நீ இராசாவைப் பெரியபொல்லாங்கில் விழுவித்தாய். இராசாக்களிற் சிலர் இவர்களுடைய புத்தியைக்கேட்டுச் சங்கடமடைகிறார்கள். ஆகையாற் குணவந்தர்களுடைய கூட்டுறவு அரசர்களுக்கிருக்கவேண்டும். கபடியாயிருக்கிற பிரதானி புத்திசாலியானாலும் அவன் ஒரு பொழுதும் இராசாவண்டை இருக்கலாகாது. மற்றுந் தாங்களே சம்பத்தடையவேண்டுமென்று நினைத்து இராசாவண்டையில் வேறொருவன் சேரலாகாதென் றிச்சிக்கிறவனும் இராசாவுக்கு உபயோகமாகான். ஏனென்றால், பலபேர் சமர்த்தர்கள் இராசாவினிடத்தில் இருந்தால் இராசா பிரகாசிப்பான். ஆசைக்காரனுந் துட்டனுமாகிய இவர்களுடைய கூட்டுறவால் இராசா பிரகாசிக்கமாட்டான். தன்னைவிட இராசாவிடத்தில் வேறொருவன் இருக்கலாகாதென்று ஆர் இச்சிக்கிறானோ அவனை இராசாவுக்குச் சத்துருவென்று நினைக்கவேண்டும். அப்படியே நீ நினைத்த தீங்குவினைத்தாய். எசமானுடைய தயை கிடைத்தாற் சேவகர்கள் காவியாமல் மிகவுமடக்கமாயிருக்கவேண்டும். நீ அதைவிட்டு விபரீதமாக நடக்கிறாய், பிறர் வைப்பாலிருப்பான் புத்தியென்பதை நீ பொய்யாக்கினாய் இப்போது உனக்கு நான் என்ன சொல்வேன். கொக்கு, குரங்குக்கு உபதேசம் பண்ணி எப்படியிறந்ததோ, அப்படி உன்னாலே நான் மரணமடைவேனென்றெனக்குத் தோற்றுகிறதென்று இப்படிக் கரடகன் சொன்னதைக்கேட்டுத் தமனகன் அதெப்படிச்சொல்லென்ன, கரடகன் சொல்லுகிறது.

ஒருநாள் குளிரால் வருத்தப்படுகிற குரங்குக்கூட்டம் மின்னும் பூச்சிகளைப்பார்த்து இது நெருப்பென்று நினைத்துக் குளிர்காய்வதற்காக அதனருகே போயிற்று. அப்போது அங்கே ஒரு மரத்தின்மேலிருந்த சூசிமுகனென்னும் ஒரு பறவை இதைப்பார்த்துக் குரங்கின் அருகே வந்து இது மின்மினிப்பூச்சி, நெருப்பல்லவென்று சொன்னவுடனே, அந்தக் குரங்குக் கூட்டத்தில ஒன்று கோபமாய் அந்தப் பட்சியைப் பிடித்து எனக்கு நீ புத்தி சொல்லுகிறவனாவென்று கல்லில் அறைந்து கொன்றது. ஆகையாற் துட்டர்களுக்கு உபதேசம்பண்ணலாகாதென்று கரடகன் சொல்ல தமனகன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்து மனதில் மிகவும் விசனப்பட்டு நானிந்தப் பாதகம் பண்ணினேனேயென்று சொல்ல கரடகன் சொல்லுகிறது, அடா தமனகா, இப்படிக்கொத்த நடத்தையினாலே துஷ்டபுத்தியைப்போல் நீயும் நாசமடைவாயென அப்போது தமனகன் துஷ்டபுத்தி எப்படிக் கெட்டானென்று சொல்லென்ன, கரடகன் சொல்லுகிறது. (இன்னும் வரும்.)

PANCHA-TANTRA-KATEI.

[A Translation &c.—Continued from page 117.]

"When the Lion pricks his ears and raises his tail, he must be understood to have purposed to kill you. Of what use is instruction to those who know all things?" So saying, Tamanacan went back to Karadacan, who, seeing him, asked "What is the news?"

Tamanakan replied, "It is done. The friendship of the two is dissolved. I will now go to Pincalon and have him exhibit suchsigns of anger, to Sanjevakan, as will be in accordance with what I have led him to expect." Having said this, he went to Pincalon and did so.

Digitized by Google

Sometime after this, Sanjevakan came to Pincalon and finding him in the itude represented to him before by Tamanakan, he was grieved and putting nself in an attitude of defence he resolved to sell his life as dearly as possi- e.

Karadakan seeing this, addressed Tamanakan in the following words; "Ta- ımaka! evil one! you have, by your company occasioned a warfare between Rajah and his friend. The principles of Rajahs in dealing with enemies of four kinds; viz. Chămam, Păthum, Tânam, and Tandam.* Of these, ıămam is most preferable; for it secures the object better than others. En- ty itse'' will vanish by the exercise of the art of Chămam. Since it is so, u hav. foolishly brought upon our Rajah a great evil. Some Rajahs led by advice of vile persons, involve themselves in difficulties —Therefore kings ed the company of good persons. A fraudulent minister, though highly ented, should not be admitted to the company of kings; for he who cherishes f-interest, and looks for gain, and wishes to keep others from enjoying the ıjah's company will not benefit them; a Rajah shines by having men of a- ity; but not by having avaricious and wicked ones. He who desires to have ne but himself close to the Rajah, is to be regarded as an enemy: you have such a manner, brought about this evil. Servants who enjoy the favour of eir masters should not be puffed up, but should be contented with their por- n. But you behave contrary to this principle. You have falsified the truth it "As the father is, so is the son." What shall I say to you? As a stork t his life by giving instruction to a monkey, so I apprehend that I shall lose y life by your folly.

Tamanakan, demanding how this was, Karadakan related as follows;

"A pack of monkeys distressed by cold, mistaking glow-worms for sparks fire, went near to warm themselves. Then a bird named Soomoogan which d lighted upon a tree near the spot, seeing this, came to the monkeys and deceived them, saying that these were glow-worms and not fire.

Upon this, one of the monkeys sprang upon the bird; saying, "Do you give e instruction?" And he caught the bird and dashed him to death against a one. Therefore, instruction should not be given to wicked persons."

Tamanakan, hearing this, held his peace; and being pained to the heart, he nfessed that he had committed a great sin. Upon this, Karadakan says, O amanaca! By such a course of conduct, you too will suffer like the one call- l Tushpăpootty.

How did Tushdăpootty suffer, demanded Tamanacan, to which Karadacan lated thus. [To be continued.]

[On the force of Habit.]

